மின்னிதழ்
# தேசியம்
THESIYAM තේසියම්
www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர்: 01 | குரல்: 110 | வள்ளுவர் ஆண்டு 2054 | திங்கட்கிழமை 18.12.2023 | பக்கங்கள் 08




# வரலாற்று வெற்றியை பதிவு செய்த ஈழத்து இசைக் குயில் கில்மிஷா!

## எம் மண்ணுக்கும்,மக்களுக்குமாக உயிர் துறந்த எம் வீர மறவர்களுக்கு இந்த வெற்றியை சமர்ப்பிக்கிறேன்!

தென்னிந்தியாவின் பிரபல தனியார் தொலைக்காட்சியில் இடம்பெற்ற சரிகமப இசை நிகழ்ச்சியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த சிறுமி கில்மிஷா வெற்றி பெற்றுள்ளார். நேற்றைய தினம் (17) இடம்பெற்ற இறுதி சுற்றில் கில்மிஷா வெற்றிவாகை சூடியுள்ளார். சரிகமப இசை நிகழ்ச்சியில் இலங்கையில் இருந்து அசானி மற்றும் கில்மிஷா ஆகிய இருவரும் கலந்து கொண்டார்கள். எனினும் இறுதிச் சுற்றுக்கு செல்லும் வாய்ப்பை அசானி தவற விட்டிருந்தார். எனினும் மலையக மக்களின் அடையாளமாக அவர் உலகளாவிய ரீதியில் பிரபல்யம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சஜித்துடன் இணைந்து செயற்படத் தீர்மானம் ஜீ.எல்.பீரிஸ்!

பக்கம் 02



# இராணுவத்தைக் கட்டுப்படுத்த எவராலும் முடியாது! ரணில் விக்கிரமசிங்க!

பக்கம் 02



பக்கம் 02

# உற்பத்தித் துறையின் வீழ்ச்சிக்கு வரி விதிப்பே காரணம்! சஜித் பிரேமதாச!

# இமாலயப் பிரகடனம்: தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு?



பக்கம் 07



# கமல் குணரத்தனவின் பதவிக்கு வருகிறது வேட்டு!

பக்கம் 02



# ரணிலின் கட்சியுடன் இணைகிறதா பொதுஜன பெரமுன....! மகிந்த பதில்



அரசியலில் இருந்து ஓய்வு பெறும் எண்ணம் தனக்கு இல்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு கட்சியும் மாநாடுகளை நடத்த வேண்டும் என்றும், அதன் மூலம் கட்சியின் பலத்தை காட்ட முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பான்மையான மக்கள் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுடன் திரண்டுள்ளதாகவும், சில மாற்றங்கள் ஏற்பட்டாலும் மக்கள் கட்சியை விட்டு நகராது மீண்டும் கட்சி துளிர்விடும் என்ற நம்பிக்கையில் உள்ளதினை கட்சியின் மாநாடு நிரூபித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.ஜனாதிபதி தேர்தல் வெற்றி

இருப்பினும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தகுதி தனக்கு இல்லை என்றும், கட்சி சார்பில் யாராக இருந்தாலும் வெற்றிபெற ராஜபக்சக்கள் பாடுபடுவார்கள் என்றும் மகிந்த உறுதியளித்துள்ளார்.

மேலும், சிறிலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவது தொடர்பில் தனக்கு தெரியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கமல் குணரத்தனவின் பதவிக்கு வருகிறது வேட்டு



தற்போதைய பாதுகாப்பு செயலர் கமல் குணரத்னவிற்கு பதிலாக புதிய பாதுகாப்பு செயலர் நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதன்படி முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரியவை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனவரி முதல் புதிய நியமனம் அவருக்கான நியமனம் ஜனவரி மாதம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை இலங்கையின் 20ஆவது இராணுவத் தளபதியாக கடமையாற்றினார்.

# ஒரு சங்கீதக் குயிலின் இசை வரலாறு!






கில்மிசாவின் தந்தை யாழ்ப்பாணம் மாநகரில் அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கில்மிசாவின் தாயார் தர்மினி கிளிநொச்சி உருத்திரபுரம் எட்டாம் வாய்க்காலைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

தாயார் தர்மினியின் தந்தையார் தர்மநாதன் அவரது மனைவி லீலாவதி ஆகியோர் யாழ்ப்பாணத்தின் வடமராட்சி அல்வாய் வடக்கு,துன்னாலை ஆகிய கிராமங்களைப் பரம்பரையாகக் கொண்டவர்கள். திரு. தர்மநாதன் ஊரறிந்த ஒரு சமூக சேவையாளர்.

அவர் பிறந்தது வடமராட்சியில் தான் வளர்ந்தது முழுவதும் கிளிநொச்சியில் தான்.

கில்சன் கட்டிடங்களுக்கான மணலை அனுமதிப் பத்திரம் பெற்று விற்கும் வாகன உடமை கொண்ட ஒரு தொழிலதிபர். தொழில் நிமித்தம் கிளிநொச்சி சென்று வரும் போது தர்மினியை விரும்பிப் பெற்றோர் சம்மதத்துடன் காதல் திருமணம் செய்து கொண்டார். கில்சன் சிறந்த சமூக சேவகராகப் பலராலும் மதிக்கப்படும் ஒருவர். இவரது குடும்பம் யாழ் கண்டி வீதியில் அரியாலையில் வசித்து வருகின்றது.

கில்மிசாவுக்கு ஒரு சகோதரர் உள்ளார்.

கில்மிசா யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் பலதுறைகளிலும் திறமையாக செயற்படும் ஒரு மாணவி. இவர்களது குடும்பம் அரியாலை கலைமகள் சனசமூக நிலைய வீதியில் குடியிருந்த போது கில்மிசாவின் இசைத் திறமையைக் கண்ட இசை ஆசிரியை திருமதி. கமலோஜினி உமாசங்கர் அருகிலுள்ள சரஸ்வதி கோயிலில் பாடலுக்குரிய ஆரம்ப நிலையை எடுத்துக் கொடுத்து ஊக்குவித்தார்.

கில்மிசாவின் இசைத்திறமையைக் கண்டு கொண்ட அரியாலை சாரங்கா இசைக்குழு அவரை ஒரு மழலைப் பாடகராகத் தனது நிகழ்ச்சிகளில் அறிமுகம் செய்தார்கள்.

மேலும் அரியாலை கலைமகள் சனசமூக நிலையமும் கில்மிசாவின் இசைத் திறமைக்கு அதிகமான களங்களை அமைத்துக் கொடுத்தார்கள்.

கில்மிசாவின் தமிழக இசைப் பயணத்துக்கு அவரது பெற்றோரது நிதிப் பங்களிப்புக்கு மேலாக அரியாலை கலைமகள் சனசமூக நிலையமும் ,உறவுகளும் கைகொடுத்து உதவினார்கள். போட்டி நடைபெற்ற போதும் போட்டி நிறைவுக்கும் தமிழகம் சென்று நேரில் உடன் பங்களித்தார்கள். தமது இசைமகள் வெற்றி மகளாகத் திரும்பி வர உற்சாகமூட்டினார்கள்.சீ தமிழ் தொலைக்காட்சி அலைவரிசையினர் சென்ற வருடம் யாழ்ப்பாணம் வந்த போது கில்மிசாவின் திறமையைக் கண்டு தமது நிகழ்ச்சிகளுக்கு அழைப்பதாகக் கூறிச் சென்றார்கள். கூறியபடியே அழைத்தும் இருந்தார்கள்.

அசாதாரண திறமையுள்ள கில்மிசா இறுதிப் போட்டியிலும் முதலாவதாக வருவாளென முதல் பாடலான குயில் பாட்டு ஹோ வந்ததென்ன இளமானே ..... பாடல் மூலமாகக் கட்டியம் கூறினார். சொன்னபடியே வென்றார்.

ரூபா 10 இலட்சம் இந்திய ரூபா பரிசை வென்று எம் தேசத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

**வேதநாயகம் தபேந்திரன்**


## அன்பான வாசகர்களுக்கு..!

உலகத் தமிழர்களின் கைகளில் தவழும் மின்னிதழ் மற்றும் அச்சு வடிவிலும் தினசரி மற்றும் வார வெளியீடாக வெளிவரும் தேசியம் பத்திரிகைக்கு தமிழ்த் தேசியத்திற்கு வலுச்சேர்க்கும் ஆக்கபூர்வமான கட்டுரைகள், கவிதைகள்,உண்மைச் சம்பவங்கள், செய்திகள் போன்றவற்றை எமக்கு அனுப்பி தேசியம் பத்திரிகையை வலுவடையச் செய்யுங்கள்.

No. 27, Kannathiddy Road, Jaffna.
Tel : 021 222 7557
E-mail : thesiyamnews@gmail.com
Whatsapp : +94 76 567 3339

**தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!**

SCAN ME

# இராணுவத்தைக் கட்டுப்படுத்த எவராலும் முடியாது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க!



நாட்டின் இறையாண்மையை பாதுகாக்கும் பெரும் பொறுப்பு இராணுவத்துக்கு உள்ளதால் அதில் தலையிடவோ அல்லது கட்டுப்படுத்தவோ எவருக்கும் இடமளிக்க முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

தியத்தலாவ இராணுவ கல்வியற் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அதிகாரம் சார் மக்களின் உரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும். நாட்டின் இறையாண்மையை பாதுகாக்கும் பெரும் பொறுப்பு இராணுவத்துக்கு உள்ளது.

அதில் தலையிடவோ அல்லது கட்டுப்படுத்தவோ எவருக்கும் இடமளிக்க முடியாது. அதே சமயம் அதிகாரம் சார் மக்களின் உரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும்.

அத்துடன் இலங்கையின் தனித்துவமும் பாதுகாக்கப்பட வேண்டும். அந்த தனித்துவத்தை பாதிக்கும் வகையில் எவரேனும் செயற்பட முற்பட்டால் அல்லது இன மற்றும் மத அடிப்படையில் தனித்தனியாக செயல்பட முயற்சித்தால் அது இலங்கையின் தனித்துவத்திற்கு கேடு விளைவிக்கும் செயற்பாடாகும்.

ஒரு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் போது என்ன நடக்கும் என்பதை கடந்த காலங்களில் நாம் அனுபவித்தோம். அப்போது நாட்டின் இறையாண்மை மட்டுப்படுத்தப்படும். நாட்டு மக்களை சமமாக நடத்தும் வகையில் சமூக முன்னேற்றமும் ஏற்பட வேண்டும்.

பொருளாதார முன்னேற்றமும் சமூக முன்னேற்றமும் இதன்போது மிக முக்கியம். இந்த கட்டமைப்பிற்குள் நாம் செயல்பட வேண்டும். ஒவ்வொரு குழுவுக்கும் இந்த கட்டமைப்பைப் பாதுகாக்கும் பொறுப்பு உள்ளது" என அவர்

# உற்பத்தித்துறையின் வீழ்ச்சிக்கு வரி விதிப்பே காரணம் : சஜித் பிரேமதாச!



நாடு உற்பத்தித்துறையில் தன்னிறைவு அடையாமைக்கு மூலப் பொருட்களுக்கு அதிக வரி விதிக்கப்படுவதே காரணம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார்.

பிங்கிரிய தொகுதி ஐக்கிய இளைஞர் சக்தியின் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது நாடு முட்டையில் தன்னிறைவு அடையவில்லை இதற்குத் தேவையான மூலப் பொருட்களுக்கு அதிக வரி விதிக்கப்படுவதே இதற்குக் காரணம்.

இதனால் முட்டையைக் கூட வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது.

இதன் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அந்நியச் செலாவணியைக் கூட இழக்க நேரிட்டுள்ளது.

நாட்டில் உற்பத்தித்துறையில் ஆக்கபூர்வமான வேலைத்திட்டம் இல்லாததும், தேவையான வசதிகளுடன் தேசிய உற்பத்திக்கு முன்னுரிமை வழுங்கப்படாமையே இதற்குக் காரணம்.

நாட்டில் நிதி இல்லையென்றால், கடல்சார் பொருளாதார முயற்சியாண்மைகளுக்கு (Blue Economy) கூட்டுத் திட்டங்கள் மூலம் நிலையான அபிவிருத்தி இலக்குகளை எம்மால் அடையலாம்.

இவ்வாறான புதிய ஆக்கபூர்வமான தீர்வுகளே நாட்டுக்குத் தேவை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

# சஜித்துடன் இணைந்து செயற்படத் தீர்மானம் : ஜீ.எல்.பீரிஸ்!



நாட்டின் பொருளாதாரத்திற்குப் பாதகத்தை ஏற்படுத்தும் தரப்பினருக்கு எதிராக எதிர்க்கட்சியுடன் இணைந்து செயற்படத் தயாராக உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

கட்டம்பே ராஜோபவனாராம விகாரையில் வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். மேலும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து பலமானதொரு எதிர்க்கட்சியை கட்டியெழுப்பவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் ஆபத்தான பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துபவர்களுக்கு எதிராகச் செயற்படுவதுடன், மக்களைப் பாதுகாப்பதே தமது எதிர்பார்ப்பு எனவும் குறிப் பிட்டுள்ளார்.


தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க

தொடர்பு கொள்ளுங்கள்..!

தொலைபேசி : 021 221 7557 / +94 76 567 3339

# தேசிய,மாகாண போட்டிகளில் சாதனை!
## புதுக்குடியிருப்பு விளையாட்டு வீரர்கள், கௌரவிப்பு!



சண்முகம் தவசீலன்



தேசிய,மாகாண போட்டிகளில் சாதனை புரிந்த புதுக்குடியிருப்பு பிரதேச விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் கௌரவிப்பு

முல்லைத்தீவு மாவட்டம் சார்பாக பங்குகொண்டு தேசிய, மாகாண மட்டத்திலான போட்டிகளில் சாதனைகள் புரிந்த புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் வீரர்களுக்கான கௌரவிப்பு மற்றும் அவர்களை பயிற்றுவித்த பயிற்றுனருக்கான கௌரவிப்பு நிகழ்வுகள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (16.12.2023) இடம்பெற்றுள்ளது.

இன் நிகழ்வின் பிரதம விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சி. ஜெயகாந்த் அவர்களும் , சிறப்பு விருந்தினராக பிரதேச செயலக கணக்காளர் க. கடம்பசோதி அவர்களும் கலந்து சிறப்பித்து சாதனையாளர்களையும் அவர்களின் பயிற்றுனர்களையும் கௌரவித்தனர்.

இந் நிகழ்வில் சாதனை விளையாட்டு வீரர்கள் அவர்களின் பயிற்றுவிப்பாளர்கள், பெற்றோர்கள், விளையாட்டு வீரர்கள், விளையாட்டு ஆர்வலர்கள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.







# ‘அதிகாரம்’ இதழ் 2 நூல் வெளியீட்டு விழா!

அதிகாரம் இதழ் 2 நூல் வெளியீட்டு விழாவானது நேற்றையதினம் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

பாடசாலைக்கு அருகில் உள்ள வைரவர் ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்று, விருந்தினர்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டு, மேற்கத்தேய இசை வாத்தியங்கள் முழுங்க அவர்கள் பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டனர்.

இதன் பின்னர் தேசியக் கொடி, பாடசாலை கொடி என்பன ஏற்றி வைக்கப்பட்டு, மங்கல விளக்கேற்றப்பட்டு, தேவாரத்துடன் நிகழ்வு ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து வரவேற்புரை, வரவேற்பு நடனம் என்பன இடம்பெற்றன. பின்னர் விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்றது.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஆக்கங்களை கொண்டு உருவாக்கப்பட்ட இந்த நூலின் அறிமுக உரையை பொறுப்பாசிரியர் செ.பிரதாப் அவர்களும், ஏற்புரையை மாணவியும், நூலின் ஆய்வுரையினை ஊடகவியலாளர் கு.டிலீப் அமுதன் அவர்களும் ஆற்றினர்.

அதன் பின்னர் நூல் வெளியீட்டு வைபவம் இடம்பெற்றது. அத்துடன் பாடசாலை அதிபர் அவர்களால் விருந்தினர்களுக்கு நினைவுப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

அரசறிவியல் மன்ற தலைவி செல்வி. பா.அகல்யா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் ரகுராம், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தின் சமூக விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் லதிக்கிறேஸ் விக்ரர் ஜெயக்குமார் அவர்களும் கலந்து சிறப்பித்ததுடன், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.










# முல்லைத்தீவில் தொடர் மழை!
## பாதிப்புக்குள்ளானோர் முகாம்களில் தங்க வைப்பு!!




முல்லைத்தீவில் தொடர் மழை காரணமாக 56 கிராமங்கள் பாதிப்பு 68 குடும்பங்கள் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை காரணமாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன 56 கிராமங்களைச் சேர்ந்த 976 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளது இரண்டு இடைத்தங்கள் முகாம்களில் 68 குடும்பங்களை சேர்ந்த 222 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் சி. கோகுலராஜா தெரிவித்துள்ளார்

முல்லைத்தீவு மாவட்டத்தின் அனர்த்தம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்

அதிகமாக குளங்களைக் கொண்ட மாவட்டமாக காணப்படுவதால் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்து குளங்களும் நீர் நிரம்பி வழிகின்றன முத்துஐயன்கட்டு குளத்தின் நான்கு வான் கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன மேலதிக நீர் வெளியேற்றப்பட்டு வருகின்றன தண்ணிமுறிப்பு குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டு மேலதிக நீர் வெளியேற்றப்பட்டு வருகின்றன.

இந்த குளங்களின் கீழ் பகுதிகளில் இருக்கின்ற மக்கள் பாதிப்புகளை எதிர்நோக்கி வருகின்றார்கள் வெள்ள நீர் வழிந்து ஓட முடியாத நிலையில் பல்வேறுபட்ட குடியிருப்புகளுக்குள் வெள்ளநீர் புகுந்துள்ளதால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் 56 கிராம சேவகர் பிரிவுகள் முல்லத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன 976 குடும்பங்களைச் சேர்ந்த 3010 பேர் இன்று(17) காலை வரை பாதிக்கப்பட்டவர்கள்

இரண்டு இடைத்தங்கள் முகாம்களில் 68 குடும்பங்களை சேர்ந்த 222 அங்கத்தவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள் அதிகளவான வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்துள்ளதால் 15 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன இதனால் மக்கள் குடியிருக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பண்டார வன்னி கிராமத்தைச் சேர்ந்த 63 குடும்பங்களை சேர்ந்த 201 அங்கத்தவர்கள் கருவேலன் கண்டல் அ.த.க.பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள் புளியங்குளம் பொது நோக்கு மண்டபத்தில் ஐந்து குடும்பங்களை சேர்ந்த 21 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள் இவர்களுக்கு சமைத்த உணவு மற்றும் மருத்துவ வசதிகளை வழங்கும் நடவடிக்கையில் அரச திணைக்களங்கள் ஈடுபட்டுள்ளனர்.

கிராமத்தில் உள்ள மக்கள் அனர்த்தங்களால் பாதிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் கிராம சேவையாளர் களுக்கு தகவல்களை வழங்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவபிரிவு மக்களுக்கு அறிவித்துள்ளது

இவ்வாறு மழைநீர் தேங்குவதற்கான காரணம் நீரோட கூடிய பாதைகள் பகுதிகளில் அத்துமீறிய கட்டிடங்கள் மற்றும் அத்துமீறிய செயல்பாடுகள் இடம்பெற்றுள்ளதால் அதிகளவான நீர் வழி செல்ல முடியாத நிலையில் இந்த அவலம் ஏற்பட்டுள்ளது

தற்போது பெய்து வரும் பருவ மழையானது இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்கு தொடரக்கூடிய சாத்தியக் கூறு காணப்படுவதால் மேலும் ஒரு காற்றழுத்தம் ஒன்று வங்கக் கடலில் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு காணப்படுவதால் மக்கள் இதனை கவனத்தில் கொண்டு அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது



சண்முகம் தவசீலன்




# திருகோணமலை மாவட்ட நீர் தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் - யான் ஓயா மற்றும் பதவியா நீர் தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் நேற்று காலை 6 மணி அளவில் பதவியா நீர்த்தேக்கத்தின் இரண்டு கதவுகள் திறக்கப்பட்டுள்ளது.

அத்துடன் யான்ஓயா நீர் தேக்கத்தின் ஐந்து கதவுகள் திறக்கப்பட்டுள்ளதுடன் மூன்று கதவுகள் 450 மில்லி மீட்டரிலும், இரண்டு கதவுகள் 200 மில்லி மீட்டரிலும் திறக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக அடைமழை பெய்து வருகின்றது. மாவட்டத்தின் ஏனைய பகுதி களில் சில இடங்களில் தாழ்நி லங்களில் மழை நீர் தேங்கி நிற்கின்றன.

திருகோணமலை, கிண்ணியா மூதூர், தோப்பூர், கந்தளாய், தம்பலகாமம், புல்மோட்டை, குச்சவெளி, கோமரங்கடவல, முள்ளிப் பொத்தானை முதலான பகுதிகளில் மழை பெய்து வருகின்றது.

சில வீடுகளில் வெள்ளம் புகந்துள்ளதோடு சில இடங்களில் மழை நீரை அகற்றும் பணிகளும் இடம் பெற்று வருகின்றன.

இதேவேளை கந்தளாய் குளத்தின் நீர்மட்டம் அதிகரித்ததன் காரணமாக (16) திகதி ஆறு வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளது.

இதனால் கந்தளாய் குளத்தை அண்டிய பகுதிகளில் உள்ள பல ஏக்கர் வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கந்தளாய் குளத்தின் வான் கதவு திறந்து இருப்பதன் காரணத்தினால் தம்பலகாமம் முள்ளிப் பொத்தானை முதலான பிரதேசங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன இதேவேளை சீரற்ற காலநிலை காரணமாக கடற்கரைப் பிரதேசங்களில் வாழும் கடற்றொழிலாளர்கள் சிலர் கடலுக்குச் செல்ல வில்லை எனவும் கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# யாழில் நடைபாதை கடைகளை உடனும் அகற்றவும்! பொலீசாருக்கு வடக்கு ஆளுநர் உத்தரவு!!

டெங்கு நுளம்பு அதிகம் பரவும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் குறிப்பாக வடிகான்களில் நீர் தேங்கி நிற்பதால் நுளம்பு பெருக்கம் அதிகரிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு குறித்த வடிகான்களை சுத்தப்படுத்துவதோடு, வீதி ஓரங்களில் போடப்பட்டிருக்கக்கூடிய நடைபாதை வியாபார நிலையங்களை உடனடியாக அப்புறப்படுத்துமாறும் பொலீசாருக்கு ஆளுநர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் உடன் அமுலாகும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன் ஊடாக வடக்குமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலீஸ் மாஅதிபருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த செயற்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு சுகாதாரத்தரப்பினர், உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் ஆளுநர் ஆலோசனை வழங்கி உள்ளார்.

மறு அறிவித்தல் வழங்கப்படும் வரை யாழ் மாவட்டத்தில் காணப்படும் அனுமதி அற்ற நடைபாதை வியாபார நிலையங்களை அகற்றுமாறும் ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதால் டெங்கு நுளம்பு பரவுவதை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், துறைசார் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

# நாச்சியாதீவு நீர்த்தேக்கத்தின் 6 வான் கதவுகள் திறப்பு!

தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக அநுராதபுரம் - நாச்சியாதீவு நீர்த்தேக்கத்தின் 6 வான் கதவுகளும் நேற்று (17) திறக்கப்பட்டுள்ளதாக நாச்சியாதீவு நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி நாச்சியாதீவு நீர்த்தேக்கத்தின் 6 வான் கதவுகளில் 2 வான் கதவுகள் தலா 4 அடி உயரத்திலும், 2 வான் கதவுகள் தலா 3 அடி உயரத்திலும், 2 வான் கதவுகள் தலா 2 அடி உயரத்திலும் திறக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக குறித்த நீர்த்தேக்கத்தில் இருந்து வினாடிக்கு 2200 கன அளவு நீர் வெளியேற்றப்படுவதாகவும் நாச்சியாதீவு நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தின் கடமை நேர அதிகாரி தெரிவித்துள்ளார்

# இமாலயப் பிரகடனம்: தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு?



நிலாந்தன்

நோர்வீஜிய மத குருவாகிய அருட் தந்தை.ஸ்டிக் உட்னெம் -Fr.Stig Utnem- இலங்கைத் தீவின் நல்லிணக்க முயற்சிகளில் மதத் தலைவர்கள் பங்களிப்புச் செய்யலாம் என்று சிந்திப்பவர்.அதற்காக உழைப்பவர்.2014இல் நான் நோர்வேக்குச் சென்றபொழுது அவரைச் சந்தித்தேன்.இலங்கையில் திருச்சபைகளின் பங்களிப்போடு இன நல்லிணக்க முயற்சி ஒன்றினை முன்னெடுக்கவிருப்பதாக அவர் என்னிடம் சொன்னார்.அதற்கு நான் சொன்னேன்,நல்ல விஷயம்.ஆனால் நல்லிணக்க முயற்சிகளை திருச்சபைகளில் இருந்து தொடங்குவதற்கு பதிலாக விகாரைகளில் இருந்து தொடங்குவதுதான் பொருத்தமாக இருக்கும் என்று. ஏனென்றால் யுத்தம் அங்கிருந்துதான் தொடங்குகின்றது. எனவே அங்கிருந்துதான் சமாதானமும் தொடங்க வேண்டும்.மாறாக திருச்சபைகளில் இருந்து அதைத் தொடங்க முற்பட்டால் புலம்பெயர்ந்த தமிழர்களும் அவர்களுக்குச் சார்பான வெள்ளைக்கார நாடுகளும் கிறிஸ்தவ அமைப்புக்களுக்குடாக தமது யுத்த வெற்றியைத் தட்டிப்பறிக்க பார்க்கின்றனர் என்று சிங்கள பௌத்த அரசியல்வாதிகள் வியாக்கியானம் செய்வார்கள் என்று.

கடந்த மாதம் 23-29ஆம் திகதி வரையும் இலங்கையிலிருந்து மதத் தலைவர்களின் குழு ஒன்று நோர்வேக்கு விஜயம் செய்தது. ஒஸ்லோ முருகன் ஆலயத்தில் கடந்த 24 ஆம் திகதி ஒரு மத நல்லிணக்க ஒன்றுகூடல் ஒழுங்கு செய்யப்பட்டது.அதில் உரையாற்றிய திருகோணமலை கத்தோலிக்க மறை மாவட்டத்தின் ஆயர் தன்னுடைய மறை மாவட்டத்தில், சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இரு வேறு சட்டங்கள் நடைமுறையில் உள்ளன என்ற தொனிப்பட கருத்து தெரிவித்துள்ளார்.அதாவது திருக்கோணமலையில் சிங்கள பௌத்த மயமாக்கல் தொடர்பில் சட்டம் அப்படித்தான் பிரயோகிக்கப்படுகிறது என்று பொருள். மேற்படி மதத் தலைவர்கள் குழுவின் நோர்வேப் பயணத்திற்குரிய ஏற்பாடுகளின் பின்னணியிலும் அருட்தந்தை.ஸ்டிக் உட்னெம் இருந்திருக்கிறார். இலங்கைத்தீவில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் அவர் இப்பொழுது ஏறக்குறைய களைத்துப் போய்விட்டார் என்று அவரைத் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள்.

இப்படிப்பட்டதோர் மத அரசியல் பின்னணியில்தான் கடந்த வாரம் ஹிமாலய பிரகடனம் என்ற ஒரு பிரகடனம் வெளியிடப்பட்டிருக்கிறது.ஜி.ரி.எஃப் என்று அழைக்கப்படும் உலகத் தமிழர் பேரவையும்,"சிறந்த இலங்கைக்கான பௌத்த சங்கமும்" இணைந்து உருவாக்கியதே மேற்படி இமாலய பிரகடனம் ஆகும். கடந்த ஏப்ரல் மாதம் நேபாளத்துக்கு ஒரு தொகுதி பிக்குகளை அழைத்துச் சென்ற ஜி.ரி.எஃப். ,அங்கு வைத்து அப்பிரகடனத்தைத் தயாரித்திருக்கின்றது. கிட்டத்தட்ட 9 மாதங்களின் பின் அதை இப்பொழுது வெளியிட்டிருக்கிறார்கள்.கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் இனப்பிரச்



சினைக்கான தீர்வைக் கண்டுபிடிக்கும் நோக்கத்தோடு பௌத்த குருமாரோடு இணைந்து ஒரு தமிழ்த் தரப்பு இவ்வாறு பிரகடனம் ஒன்றை வெளியிட்டிருப்பது இதுதான் முதல் தடவை.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தனி நாட்டைத் தவிர வேறு எந்த ஒரு தீர்வைப் பெறுவதாக இருந்தாலும்,பௌத்த மகா சங்கத்தோடு உரையாடத்தான் வேண்டும்.சமாதானம் ஆகட்டும், நல்லிணக்கமாகட்டும் எதுவும் பௌத்த விகாரைகளில் இருந்துதான் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

கடந்த ஒரு நூற்றாண்டு காலம் முழுவதிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளின் போது, அவற்றைத் தடுத்ததில் அல்லது குழப்பியதில் மகா சங்கத்துக்கு முக்கிய பங்கு உண்டு.இலங்கைத் தீவின் பௌத்தம்,ஓர் அரச மதம், அரசியலில் தீர்மானிக்கும் சக்திகளாக காணப்படும் அரசியல்வாதிகள் படைத் தரப்புசிங்கள பௌத்த ஊடகங்கள் என்பவற்றோடு பௌத்த மகாசங்கமும் ஒன்று.எனவே மகாசங்கத்தின் ஆசீர்வாதங்களின்றி இலங்கைத்தீவில் சமாதானத்தைக் கொண்டு வர முடியாது.

ஆனால் கடந்த ஒரு நூற்றாண்டு காலப் பகுதிக்குள் தமிழ்த் தரப்பிலிருந்து மகா சங்கங்களை நோக்கிச் சென்றவர்கள் மிகக் குறைவு.விக்னேஸ்வரன் முதலமைச்சராகப் பதவியேற்றதும் மகாநாயக்கர்களைச் சந்திக்கச் சென்றார்.அதில் ஒரு பீடம் அவரை மதித்து நடத்தியதாகவும் மற்றொரு பீடம் அவரை மதிக்கவில்லை என்றும் கூறப்பட்டது.அதன்பின் தமிழ் அரசியற் சமூகத்தில் இருந்து யாரும் மகாநாயக்கர்களோடு உரையாடவில்லை. அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளுக்குத் திட்டமிட்டு நியமிக்கும் தமிழ் ஆளுநர்கள் மகாநாயக்கர்களிடம் சென்று ஆசீர்வாதங்களைப் பெற்றார்கள்.அதுபோல அண்மையில் கொழும்பில் பெரிய அளவில் முதலீடு செய்வதற்கு வந்த புலம்பெயர்ந்த தமிழ் முதலாளி ஒருவரும் தன் மனைவியோடு சென்று மகா சங்கத்தினரிடம் ஆசீர்வாதங்களைப் பெற்றிருந்தார்.மேலும் இந்தியாவில் இருந்து வரும் அமைச்சர்களும்

மிகுதி 08 ஆம் பக்கத்தில்...

# தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு?



தூதுவர்களும் மகா சங்கத்தினரிடம் சென்று ஆசீர்வாதங்களைப் பெறுகிறார்கள். இப்படிப்பட்டதோர் பின்னணியில், மகா சங்கத்தின் ஆசிர்வாதத்தோடு ஒரு தீர்வு முயற்சியை ஜி.ரி.எஃப் தொடங்கியிருக்கிறது. மகாசங்கத்தின் ஆசீர்வாதம் கிடைத்திருப்பதால் அம்முயற்சிக்கு அதிக கவனிப்புக் கிடைத்திருக்கிறது.

ஹிமாலய பிரகடனம், இனப்பிரச்சினைக்கான தீர்வுக்குரிய மென்மையான வரையறைகளை கொண்டிருப்பதாக ஜி.ரி.எஃப்பின் தலைவர் சுரேன் சுரேந்திரன் கூறுகிறார். ஆம். அவை மென்மையான வரையறைகள் தான். ஆனால், அதை மிகச்சரியான வார்த்தைகளிற் சொன்னால், மகா சங்கத்தின் ஆசிர்வாதங்களைப் பெறுவதற்காகத் தமிழ் மக்களின் கோரிக்கைகள் அங்கே மென்மையாக்கப்பட்டிருக்கின்றன என்பதே உண்மை.

மகாநாயக்கர்களை வணங்க வேண்டும் மதிக்க வேண்டும். எப்பொழுது என்றால் புத்தபகவான் கூறியதுபோல அவர்கள் சகலவற்றையும் துறந்த சன்னியாசிகளாக இருக்கும் பொழுது அவர்களை வணங்கலாம். அது ஆன்மீகம். ஆனால் புத்தபகவான் வாழ்ந்து காட்டியதற்கு மாறாக மகாசங்கம் அதிகாரத்தின் ஒரு பகுதியாக இருக்கும் பொழுது, அந்தக் கட்டமைப்புடன் பேசப் போகும் தமிழர்கள் மண்டியிட முடியாது. ஏனெனில் அது அரசியல். தமிழ் மக்கள் தமது கோரிக்கைகளை நீர்த்துப் போகச்செய்து மகாசங்கத்தின் ஆசிர்வாதங்களைப் பெறத் தேவையில்லை. பதிலாக தமிழ்மக்கள் தங்களுடைய பேர பலத்தை அதிகப்படுத்திக் கொண்டு மகா சங்கத்தோடு பேசப் போகலாம்.

ஜி.ரி.எஃப் உடனான சந்திப்பின் போது அஸ்கிரிய பீடாதிபதி கூறியதாக ஒரு தகவலை சுரேன் சுரேந்திரன் தெரிவித்திருந்தார். யுத்த காலத்தில் தான் வன்னிக்கு வர விரும்பியதாக மகாநாயக்கர் கூறியுள்ளார். இருக்கலாம். அப்பொழுது தமிழ் மக்களிடம் பேர பலம் இருந்தது. அதனால் மகாநாயக்கர் வன்னிக்கு வர விரும்பியிருக்கலாம். இப்பொழுது தமிழ் மக்களின் பேர பலம் குறைந்து போய்விட்டது. அதனால்தான் தாயகத்துக்கு வெளியில் இருந்து தாயகத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கும் பிரகடனங்களை உருவாக்கும் ஒரு நிலை.

ஜி.ரி.எஃப் புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தை முழுமையாகப் பிரதிநிதித்துவ படுத்தவில்லை. முதலில் அவர்கள் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் மத்தியிலும் இது தொடர்பாக விவாதித்திருக்க வேண்டும். அதன் பின் தாயகத்தில் உள்ள தமிழ்க் கட்சிகள், செயற்பாட்டாளர்கள், குடிமக்கள் சமூகங்களோடு உரையாடியிருந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி எதுவும் வெளிப்படையாக நடக்கவில்லை.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இமாலய பிரகடனக் குழவினரோடு வடமராட்சியைச் சேர்ந்த ஒரு முன்னாள் மாநகர சபை உறுப்பினர் காணப்பட்டார். இவர் சுமந்திரனுக்கு நெருக்கமானவர். ஆனால் யாழ்ப்பாணத்துக்கு வந்த பிரகடனக்குழு வெளிப்படையாக எந்த அரசியல் வாதியோடும் தன்னை நெருக்கமாகக் காட்டிக் கொள்ளவில்லை. ஜி.ரி.எஃப் பிரதிநிதிகளும் பிக்குகளும் நல்லை ஆதீனத்தில் சைவ சமயத் தலைவர்களைச் சந்தித்த பொழுது, அதில் பங்குபற்றிய சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு.திருமுருகன் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டினார். உங்களை எனக்குத் தெரியாது என்பதே அது. அதுதான் உண்மை. அதாவது தாயகத்தில் உள்ள தரப்புகளோடு ஜி.ரி.எஃப் உரையாடியிருக்கவில்லை. இதுபோன்ற முயற்சிகளை தாயகத்தை மையமாகக் கொண்டுதான் முன்னெடுக்க வேண்டும். தாயகத்துக்கு வெளியில் இருந்து அல்ல. அந்த அடிப்படையில் பார்த்தால், இது ஒரு தலைகீழ் முயற்சி.

இது புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் ஒரு திரட்சியாக இல்லை என்பதைக் காட்டுகின்றது. அங்கேயும் தனி ஓட்டங்கள் பலமாக உள்ளதைக் காட்டுகின்றது. அதுமட்டுமல்ல, மேற்கு நாடுகளிடம் கடனுக்காகத் தங்கியிருக்கும் ஒரு ஜனாதிபதியைஜநாவிற்கு வீட்டு வேலைகள் செய்ய வேண்டிய ஒரு ஜனாதிபதியை அந்த வீட்டு வேலைகளில் ஒன்று ஆகிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை உருவாக்க முயற்சிக்கும் ஒரு ஜனாதிபதியை அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக் கூடிய ஒரு ஜனாதிபதியை பாதுகாப்பதுதான் இந்த நகர்வின் உள்நோக்கமா என்ற சந்தேகங்களை அதிகப்படுத்துகின்றது.

இந்த இடத்தில் தாயகத்தில் உள்ள கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் குடிமக்கள் சமூகங்களும் ஒரு விடயத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். தாயகத்தில் பலமான ஒரு அரசியல் இயக்கம் அல்லது கட்சிகளின் கூட்டு இல்லாத வெற்றிடந்தான் இதற்கெல்லாம் காரணம். தாயகத்தில் பலமான ஒரு மக்கள் இயக்கம் அல்லது மக்கள் அதிகாரம் இருந்திருந்தால் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் தாயகத்தை நீக்கிவிட்டு இது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட முடியாது. அல்லது தாயகத்தில் உள்ள சில அரசியல்வாதிகளின் மறைமுக அனுசரணையோடு இதை முன்னெடுத்திருக்க முடியாது. தாயகத்தில் தமிழ்மக்கள் ஒரு பலமான பேரம் பேசும் சக்தியாக இல்லை. அதனால்தான் தமிழ்மக்களின் தலைவிதியை பெருமளவுக்கு வெளிச் சக்திகளே தீர்மானிக்க முயற்சிக்கின்றன. ஜெனிவாவில் தீர்மானங்களை நிறைவேற்றுகிறார்கள். அல்லது, துவாரகா வருகிறார் என்று படங் காட்டுகிறார்கள். அல்லது தமிழ் மக்களுக்குத் தெரியாமல் ஒரு பிரகடனத்தைத் தயாரித்து விட்டு, அதைக் கொழும்பில் வைத்து வெளியிடுகிறார்கள். தமிழ் மக்களுக்கு யார்